சுருக்கம்

வேளாண்மைத்துறை –தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் – புதுக்கோட்டை மாவட்டம் – குடுமியான்மலை மாநில வேளாண்மை பயிற்சி நிலையத்தில் இரண்டு வருட வேளாண்மை பட்டயப் படிப்பினை 2012–2013 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்குதல் – நிர்வாக ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை (பக ) துறை

அரசு ஆணை (நிலை) எண் :253 நாள் : 06.11.2012

திருவள்ளுவர் ஆண்டு 2043, ஐப்பசி–21

படிக்க:

பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள் கடித எண் த.நா.வே.ப/டிபிஎம்/I8/எப்8 சட்டமன்ற அறிவிப்பு – புதிய திட்டங்கள் கருத்துரு / 12–13, நாள் 25.05.2012, 11.06.2012 மற்றும் 06.07.2012.

******

ஆணை:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2012–2013ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் மாநில வேளாண்மை பயிற்சி நிலையத்தில் இரண்டாண்டு வேளாண் பட்டயப்படிப்பு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் துவங்கப்படும் என அறிவித்தார்கள்.

2. மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் குடுமியான்மலை மாநில வேளாண்மை பயிற்சி நிலையத்தில் இரண்டு வருட வேளாண்மை பட்டயப்படிப்பு தொடங்குவது குறித்த கருத்துருவினை பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள் அரசுக்கு அனுப்பியுள்ளார். அதன்படி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டின் வேளாண் படிப்பு மற்றும் வேளாண் தொழில் முன்னேற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு உகந்த தகுதி வாய்ந்த வேளாண் தொழில்நுட்ப வல்லுனர்களை உருவாக்கி வருகிறது. வேளாண் பட்டய படிப்பின் மூலமாகத் தகுதி வாய்ந்த வேளாண் விரிவாக்க வல்லுனர்களை உருவாக்குவதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் முதன்மை வகிக்கிறது. இதன் வரிசையில் அதிகரித்து வரும் வல்லுனர் தேவை மற்றும் வேலைவாய்ப்பினைக் கருத்தில் கொண்டு புதிய வேளாண் பட்டய படிப்பு நிலையம் துவக்க வேண்டியுள்ளது எனப் பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள் தெரிவித்துள்ளார். புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயம் முதன்மைத் தொழிலாக விளங்குவதாகவும் இம்மாவட்டத்தில் நெல் பயிர் அதிக பரப்பளவில் அதாவது 90000 எக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகிறது என்றும் அதனை அடுத்து நிலக்கடலை 36000 எக்டேர் பரப்பளவில் மானாவாரி பயிராக பயிரிடப்படுகிறது. இந்த மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரிகள் எதுவும் இல்லை என்றும் ஆகவே இங்கு புதிய வேளாண்மை பட்டய படிப்பு நிலையம் துவக்குவது அவசியமாகிறது என்றும் தெரிவித்து இப்பட்டயப் படிப்பு நிலையத்தை புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் துவக்கலாம் என்றும் பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நிலையத்திற்கு தேவைப்படும் அலுவலர்கள்

1. பேராசிரியர் – 1
2. இணை பேராசிரியர் – 2
3. உதவிப் பேராசிரியர் – 8
4. நிர்வாக அலுவலர்கள் – 4
5. காவலர்கள் – 2
6. ஒட்டுநர் – 1

3. மேலும் பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள் தனது கருத்துருவில் நிலம் மற்றும் கட்டமைப்பு வசதிகள் வேளாண்மைத் துறையால் வழங்கப்படும் என்றும் பட்டயப்படிப்பு நடத்துவதற்கு தேவையான ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பரவலமர்த்தும் ( Deploy) என்றும், மேலும், 2012–2013ஆம் கல்வி ஆண்டில் தொடங்கப்படவுள்ள இவ்வேளாண்மை பட்டயப்படிப்பிற்கான மாணவர் சேர்க்கைக்கான (50 மாணவர்கள் ) அறிவிக்கை தமிழ் நாளிதழ்களில் வெளியிடப்பட்டுள்ளது என்றும், மாணவர் விண்ணப்பங்களை ஆய்வு செய்யும் பணி நடைபெற்று வருவதாகவும் ஆகையால் இவ்வேளாண்மை பட்டயப்படிப்பு தொடங்குவதற்கான நிர்வாக ஆணை வழங்கும்படி (Administrative order) அரசினை கோரியுள்ளார்.

4. பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து அதனை ஏற்கிறது. அதன்படி, புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான் மலையில் உள்ள மாநில வேளாண்மை பயிற்சி நிலையத்தில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் இரண்டு வருட வேளாண்மை பட்டயப்படிப்பினை 2012–2013 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்குவதற்கு அரசு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி (Administrative Order) ஆணையிடுகிறது.

5. மேலே நிர்வாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் தொடர்பான கணக்கு தலைப்பு "2415 – வேளாண்மை ஆராய்ச்சியும் கல்வியும் – 01 பயிர் வளர்ப்பு – 120 ஏனைய நிறுவனங்களுக்கு நிதி உதவி–பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் –II - மாநிலத்திட்டம் – JA - தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திற்கு உதவித்தொகை–02–மூலதனச் செலவிற்கான உதவித் தொகை (2415 01– 120 – JA –0921)"

6. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. (அ.சா. எண் 59540/ நிதி (வேளாண்மை) துறை /2012 நாள் 26.10.2012).

/ஆளுநரின் ஆணைப்படி /

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலர்

பெறுநர்
பதிவாளர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்–3
வேளாண்மை ஆணையர், சென்னை –5
வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர்–3
மாவட்ட ஆட்சியர், புதுக்கோட்டை
மாநிலக் கணக்காயர், சென்னை – 18
மாநிலக் கணக்காயர்(தணிக்கை), சென்னை – 18

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர், சென்னை –9
வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை –9
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலர் அவர்களின் தனிச் செயலர், சென்னை –9
முதன்மைச் செயலர், நிதித்(வேளாண்மை ) துறை, சென்னை –9
வருவாய்த் துறை , சென்னை –9

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்